

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று (27.11.2024) செங்கல்பட்டு மாவட்டம், மேடவாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக்கல்வித்துறை சார்பில் 2023–24ஆம் கல்வி ஆண்டில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.1.22 கோடி செலவில், மெட்ராஸ் ரவுண் டேபிள் பங்களிப்புடன் கட்டப்பட்டுள்ள 8 வகுப்பறைகள் கொண்ட புதிய பள்ளி வகுப்பறைக் கட்டிடம், சிறிய நூலகம், சிறிய ஆய்வக கட்டிடம் ஆகியவற்றினை திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் எஸ்.அருண்ராஜ், மெட்ராஸ் ரவுண்ட் டேபிள் நிர்வாகிகள் மற்றும் பள்ளிக்கல்வித்துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### மேடவாக்கத்தில் ரூ.1.22 கோடியில்

# ‘நமக்கு நாமே’ திட்டத்தின் கீழ் 8 வகுப்பறைகள்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்பு!

சென்னை, நவ. 28 -

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பள்ளிக்கல்வித்துறை நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.1.22 கோடி செலவில் 8 வகுப்பறைகள், சிறிய நூலகம், சிறிய ஆய்வக கட்டிடத்தை அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் திறந்து வைத்தனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று (27.11.2024) செங்கல்பட்டு மாவட்டம், மேடவாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக்கல்வித்துறை சார்பில் 202324 ஆம் கல்வி ஆண்டில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.1.22 கோடி செலவில் மெட்ராஸ் ரவுண் டேபிள் பங்களிப்புடன் கட்டப்பட்டுள்ள 8 வகுப்பறைகள் கொண்ட புதிய பள்ளி வகுப்பறைக் கட்டிடம், சிறிய நூலகம், சிறிய ஆய்வு கட்டிடம் ஆகியவற்றினை திறந்து வைத்தார்கள்.

பின்னர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, பள்ளிக் கல்வித்துறையில் ஏராளமான திட்டங்கள் இன்றைக்கு பயன்பாட்டிற்கு வந்து, பள்ளிக் கல்வித்துறை, இந்திய அளவில் முதன்மை இடத்தில் இருந்து வருவதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்ப் புதல்வன், புதுமைப் பெண், பேராசிரியர் பள்ளிக் கல்வி மேம்பாட்டுத் திட்டம் என்று பல்வேறு திட்டங்களை தமிழ்நாட்டில் கொண்டு வந்து பள்ளிக்கல்வித்துறை இன்றைக்கு வீறுநடை போட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் முதலமைச்சர் அவர்கள் பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களின் பெயரால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற ரூ.7,500 கோடி செலவில் தமிழ்நாடு முழுவதும் பாழடைந்த பள்ளிக் கட்டிடங்களுக்கு மாற்றாக புதிய கட்டிடங்கள் கட்டும் பணி தொடங்கி, அமைச்சர் சற்று நேரத்திற்கு முன்பு சொன்னதைப்போல 7,300 வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ஆண்டொன்றுக்கு ரூ.1,500 கோடி செலவில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது என்றாலும் தன்னார்வலர்களும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், பொது மக்களும் இணைந்து “நமக்கு நாமே” என்கின்ற ஒரு திட்டத்தின் மூலம் அவர்களுடைய பங்களிப்போடு புதிய கட்டிடங்களை கட்டும் பணிகள் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதிலும் எல்லா துறைகளிலும் நடைபெற்று வருகிறது.

பள்ளிக்கல்வி துறையில் அதிக அளவில் தன்னார்வலர்களையும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் ஒருங்கிணைக்கும் முயற்சியை பள்ளிக் கல்விதுறை அமைச்சர் அவர்கள் மிகச்சிறப்பாக செய்து வருகிறார்கள். அந்த வகையில் மேடவாக்கத்தில் இருக்கின்ற இந்த அரசுபள்ளியில் ரூ.1.22 கோடி செலவில் எட்டு வகுப்பறைகளும், ஒரு நூலகமும் கொண்ட ஒரு கட்டிடம் ஒன்று, ரூ.80 இலட்சம் செலவில் மெட்ராஸ் ரவுண் டேபிள் என்கிற தன்னார்வ தொண்டு நிறுவனம் தந்து மீதம் இருக்கின்ற ரூ.42 இலட்சம் அரசு தந்து கட்டிடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளினை ஒட்டி இது ஒரு அரசு நிகழ்வாகவும், இக்கட்டிடத்தை திறந்து வைத்து மகிழ்ச்சி அடையும் நாளாகவும் இது இருந்து வருகிறது.

வேளச்சேரி பகுதியில் ஆக்கிரமிப்பு பகுதிகள் அகற்றப்பட்டு 1.60 மில்லியன் கன அடி அளவிற்கு நீர்நிலைகள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. கிண்டி ரேஸ் கோர்ஸ் பகுதியில் 160 ஏக்கரில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு 4.60 மில்லியன் கன அடி அளவிற்கு நீர் தேக்கும் அளவிற்கு நான்கு நீர்நிலைகள் உருவாக்கப்பட்டு வருகிறது.

துணை முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கரணையில் ஏற்கெனவே ஏறத்தாழ 13 ஏரிகளிலிருந்து வருகின்ற உபரி நீர் நாராயபுரம் ஏரிக்கு வந்து அங்கிருந்து சதுப்பு நிலங்களிலிருந்து ஒக்கியம் மடுவிற்கு சென்று அங்கிருந்து கடலுக்கு செல்லும். குறிப்பாக நாராயபுரம் ஏரியிலிருந்து வரும் உபரிநீர் என்பது 1000 கன அடி அளவிற்கு மட்டுமே நீர்வழிப் பாதை இருந்தது.

துணை முதலமைச்சர் இரண்டு முறை ஆய்விற்கு வந்து கூடுதலாக அந்த இடத்தில் 1000 கனஅடி அளவிற்கு நீர் வெளியேறும் நீர்வழிப் பாதை கண்டறிந்து அந்த கரையை பலப்படுத்திட வேண்டும் என்று ஆணையிட்டு அந்தவகையில் நீர்வளத்துறை கரையை பலப்படுத்துவதற்குரிய பணியினை செய்து வருகிறார்கள். அப்பகுதியில் நான்கு கோவில்கள் கட்டப்பட்டிருந்தது. அப்பகுதி சம்மந்தப்பட்ட பொது மக்களின் இசைவுடன் கோவில்கள் அகற்றப்பட்டு கரையை பலப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் சென்னையைப் பொறுத்தவரை ஒரு மண்டலத்திற்கு ஒரு IAS அலுவலர் அவர்கள் நோடல் அலுவலராக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் டெல்டா பகுதியில் 2 அல்லது 3 நாட்களுக்கு மழை இருக்கும் சூழ்நிலையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களை நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள், இப்படி தமிழ்நாடு முழுவதும் டெல்டா பகுதிகளாக இருந்தாலும், சென்னைப் பகுதியாக இருந்தாலும் மழை வெள்ளம் பாதிப்புகள் இல்லாத வகையில் மக்களைக் காப்பதற்குரிய நடவடிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செய்து வருகிறார்கள்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் எஸ்.அருண்ராஜ், மெட்ராஸ் ரவுண் டேபிள் நிர்வாகிகள் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா தமிழ்நாடு மின்கழகத் தொமுச தலைமை சங்கத்தின் சார்பாக, பொதுச் செயலாளர் பா மணிமாறன் தலைமையில், மின்வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள தொழிலாளர், பொறியாளர், அலுவலர்கள், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், தூய்மை பணியாளர்கள், காவல் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் என 300 பேர்களுக்கு மதிய அறுசுவை உணவு, 300 பேர்களுக்கு ரூபாய் 1200 மதிப்புள்ள அரிசி மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு பைகள் வழங்கப்பட்டன. சங்க மாநில, திட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.



தி.மு. கழக இளைஞரணி செயலாளரும் – துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அரசு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஆர்.எம்.அன்பு நிதி, மீனாட்சி அம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் திருமதி.மீனா அன்பு நிதி ஆகியோர் கோவில் வளாகத்தில் தங்கத் தேரினை வடம் பிடித்து இழுத்து சிறப்பு பிரார்த்தனை மேற்கொண்டனர். உடன் தி.மு.க. வழக்கறிஞர் மேலூர் ரமேஷ், மகேந்திரபதி, அமலன், இளைஞரணி வினோத் மகேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து உள்ளனர்.


சென்னைத் தெற்கில் ஒரு மாதம் முழுவதும்

“உதயநிதியின் உதயநாள்” விழா

364 சொற்பொழிவாளர்கள் பங்கேற்கும்
182 பிறந்தநாள் கூட்டங்களின் “இன்றைய நிகழ்ச்சிகள்”



28.11.2024 - வியாழக்கிழமை

| வ.எண் | சொற்பொழிவாளர்கள் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 1. | கரூர் முரளி<br>செ.ஜோதி | 168 வட்டம் - காந்திநகர் மெயின்ரோடு, ஈக்காட்டுத்தாங்கல், சைதை கிழக்கு பகுதி. | நா.ராதாகிருஷ்ணன்<br>வட்டச் செயலாளர் |
| 2. | கந்திலி கரிகாலன்<br>சொ.தமிழினியன் | 137 வட்டம் - கலைஞர் நகர் தெற்கு, விருகம்பாக்கம். | அ.கதிரேசன்<br>வட்டச் செயலாளர் |
| 3. | வி.பி.கலைராஜன்<br>மு.கபில் | 175 வட்டம் - நேதாஜி சாலை, பெரியார் நகர், வேளச்சேரி மேற்கு | க.பாரதிதாசன்<br>வட்டச் செயலாளர் |
| 4. | காசிமுத்துமாணிக்கம்<br>மகிழவன் | 189 வட்டம் - வார்டு அலுவலகம், பள்ளிக்கரணை, சோழிங்கநல்லூர் மத்திய பகுதி | வ.பாபு<br>வட்டச் செயலாளர் |
| 5. | கடலூர் இள.புகழேந்தி<br>இ.நேரு | 148 வட்டம் - லஷ்மி நகர், மதுரவாயல் வடக்கு பகுதி | எஸ்.ரமேஷ்ராஜ்<br>வட்டச் செயலாளர் |
| 6. | சேலம் சுஜாதா<br>பா.ஸ்ரீலேகா | 187 வட்டம் - வெங்கடேசபுரம். கொட்டிவாக்கம், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி | கே.வி.சாத்தப்பன்<br>வட்டச் செயலாளர் |

9444129952

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்போர் :

மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அளவிலான அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். எனவே கழகத் தோழர்கள் பெருந்திரளாக இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

அன்புடன் : அமைச்சர் மா.சுப்பிரமணியன் B.A., LL.B.,
மாவட்ட கழக செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.